பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 19 | திங்கட்கிழமை | 02.02.2026 | அதிர்வு 186

## கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நெடுங்கேணியில் இன்று பெரும் போராட்டம்

அரசின் கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று திங்கட்கிழமை வவுனியா – நெடுங்கேணியில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

06

# தமிழ் இனப் பரம்பலைச் சிதைக்கும் திட்டத்துக்கு எதிராக நெடுங்கேணியில் இன்று அணிதிரள்வோம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறைகூவல்




(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் இனப் பரம்பலைச் சிதைக்கும் கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக அனைவரும் இன்று வவுனியா – நெடுங்கேணியில் அணிதிரள வேண்டும் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன்

06




# தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து பயணிக்க டக்ளஸ் பச்சைக்கொடி

## இன்னும் அழைப்பு வரவில்லை என்றும் அவர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

**இணைந்து பயணிக்கத் தமிழ்க் கட்சிகளிடமிருந்து அழைப்பு வந்தால், அதைச் சாதகமாகப் பரிசீலிப்பதற்குத் தயாராக இருப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.**

06




"அண்மையில் வீசிய சூறாவளி தாக்கத்தின் பின்னர் இலங்கையை மீள கட்டியெழுப்பும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதனால் மாகாண சபைத் தேர்தல்களைத் திட்டமிட்டபடி இந்த ஆண்டில் நடத்துவது சாத்தியமற்றது. இருப்பினும் தேர்தல் நடத்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்ற சாரப்பட அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார் என்று சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய அறிவிப்பு அரசு தரப்பில் இருந்து வரும் என்பது எதிர்பாக்கப்பட்ட ஒன்றுதான்.

நமது யாழ்ப்பாணத்துக்கு சித்தர் யோகர் சுவாமிகள் நான்கு மகா வாக்கியங்களை 06

# மாகாண சபைத் தேர்தல்: இவ்வருடம் சாத்தியமற்றது!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவிப்பு



“மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்துவது சாத்தியமற்றது. இருப்பினும், தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.”

– இவ்வாறு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அண்மையில் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஒன்றின் பின்னர் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சந்தித்தார். அப்போது, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசு விரைவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

“மாகாண சபைத் தேர்தலில் காணப்படும் சட்டச் சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும். அதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சகல தரப்பினருடன் கலந்துரையாடி முரண்பாடற்ற தீர்வை எடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது. டித்வா புயல் தாக்கத்தின் பின்னர் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும்.” – என்றார்.

# ராஜபக்ஷவுக்கும் அநுரவுக்கும் இடையில் வித்தியாசம் இல்லை

## நாள்தோறும் ஊழல், மோசடிகள் அதிகரிப்பு என்று சஜித் அணி பகிரங்கக் குற்றச்சாட்டு

“தூய்மையான அரசியல் ஒன்றை ஏற்படுத்துவதாக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசில் இருப்பவர்கள், தற்போது நாளுக்கு நாள் ஊழல், மோசடிகளில் சம்பந்தப்பட்டு வருகிறார்கள். ராஜபக்ஷ குழுவுக்கும் அநுர குமாரவின் குழுவுக்கும் இடையில் வித்தியாசம் இல்லை.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நிரோசன் பாதுக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

“நாட்டை ஆட்சி செய்து வந்த அனைவரும் ஊழல் மோசடிக்காரர்கள் எனவும், தூய்மையான அரசியல் ஒன்றைக் கட்டியெழுப்ப அதிகாரத்தை வழங்குமாறும் தெரிவித்தே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தில் மக்கள் உணரும் வகையில் எதனையும் செய்யவில்லை. அதேநேரம் அரசில் இருப்பவர்கள் நாளுக்கு நாள், ஊழல் மோசடி சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டு வருகின்றார்கள்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கறுப்புப் பட்டியலில் உள்ள நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் ஒருவரின் வங்கிக் கடன் அட்டையைப் பயன்படுத்தி இந்தியாவில் வைத்து ஒரு மில்லியனுக்கு பொருட்கள் கொள்வனவு செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அவ்வாறு இல்லை என்றால் முடியுமானால் அவர் நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். ஊழல், மோசடி தொடர்பில் இவர்களுக்கும் ராஜபக்ஷ குழுக்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கின்றதா எனக் கேட்கின்றோம்.

சுங்கத்தில் இருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது முதல் தற்போது தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி வரை பாரியளவில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் அரசு அனைத்து விடயங்களையும் அரச அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி, தப்பித்துக் கொள்ளும் நடவடிக்கையையே கையாண்டு வருகின்றது.



இந்நிலையில் தற்போது டித்வா அனர்த்தத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு 20 இலட்சம் ரூபா வழங்குவதாக அளித்த வாக்குறுதியின் பிரகாரம் அனுராதபுரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 20 இலட்சம் ரூபா அடங்கிய காசோலையை ஜனாதிபதி கையளித்திருந்தார். ஆனால் அந்தக் காசோலைகளைப் பெற்றவர்கள் வங்கியில் கொடுத்த போது, அந்த வங்கிக் கணக்குகளில் பணம் இல்லை எனத் தெரிவித்து அந்தக் காசோலைகள் மீளப் பெறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு 17 காசோலைகள் மீளத் திருப்பப்பட்டிருக்கின்றன.

ஆனால் அனுராதபுரம் பிரதேச செயலாளர் இதனை நியாயப்படுத்தும் வகையில், காசோலை வழங்கப்பட்டவர்களின் காணியின் உண்மையான உரிமையாளர்கள் அவர்களா? மற்றும் இன்னும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடவில்லை. அதனால் காசோலைகளை வங்கியில் இடவேண்டாம் என நாங்கள் தெரிவித்தோம் எனத் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலாளரின் கூற்றின் பிரகாரம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி இருப்பது அவர்களின் காணிகளின் உரித்து தொடர்பில் உறுதிப்படுத்தப்படாத, ஒப்பந்தம் செய்துகொள்ளாத காசோலையாகும். அப்படியானால் ஜனாதிபதி அதிகாரபூர்வமற்ற காசோலைகளையே வழங்கி இருக்கிறார். அனுபவம் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முடியாது என நாங்கள் ஜனாதிபதித் தேர்தலின்போதே தெரிவித்திருந்தோம். தற்போது அது உண்மையாகி வருகின்றது.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுக் கூரை தகரம் ஒன்றுக்கு 10 இலட்சம் வழங்குவதாக அறிவிப்பு செய்தபோது, அவரால் ஒருபோதும் முடியாது என்பதை உணர்ந்து கொண்டோம். அதேபோல் ஜனாதிபதியின் அமைச்சர்கள் தற்போது ஊழல், மோசடியில் சம்பந்தப்பட்டு வருவதால், நாடு அராஜக நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது.” – என்றார்.







# நியூட்டனுக்கு முன்பே அறிவியல் உண்மையை இந்த உலகத்துக்குச் சொன்னவர் திருவள்ளுவர்

## 7ஆவது சர்வதேச திருக்குறள் மாநாட்டில் வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

“நவீன அறிவியல் விஞ்ஞானி ஐசக் நியூட்டன்கண்டுபிடித்தமூன்றாம்விதியை, பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தனது திருக்குறளின் ஊடாக உலகுக்குச் சொன்னவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர். மனித குலத்துக்கு முற்றிலும் பொருந்தக் கூடிய வாழ்வியல் நெறிகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பொக்கிஷமாக திருக்குறள் விளங்குகின்றது.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மொறிசியஸ் சர்வதேச திருக்குறள் மன்றம், வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச தமிழ்ப் பண்பாட்டு மையம் ஆகியவற்றின் கூட்டு ஏற்பாட்டில், “மனித மாண்பு” எனும் தொனிப்பொருளிலான 7ஆவது சர்வதேச திருக்குறள் மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வு வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறிவியல் சார்ந்த கருத்துக்களை, தற்காலக் கண்டுபிடிப்புகளுடன் ஒப்பிடும்போது வள்ளுவரின் தீர்க்கதரிசனம் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. உதாரணமாக, “ஒவ்வொரு வினைக்கும் அதற்கு இணையான எதிர் வினையுண்டு“ என்ற நியூட்டனின் மூன்றாம் விதியை, வள்ளுவர் அன்றே, “பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்” என்ற குறளின் மூலம் மிக எளிமையாக விளக்கியுள்ளார். நாம் ஒருவருக்குத் துன்பம் இழைத்தால், அது நிச்சயம் நமக்கே திரும்பி வரும் என்ற வாழ்வியல் உண்மையை அறிவியல் பூர்வமாக அவர் அன்றே எடுத்துரைத்துள்ளார்.

மனிதன் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது, அவ்வாறு செய்தால் கிடைக்கும் பயன்கள் என்ன என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறும் நூல் திருக்குறள். மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு வள்ளுவர் வகுத்த பாதை மிக அழகானது. “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்” என்று அவர் கூறியது போல, அறநெறியில் நின்று வாழும் மனிதன், வானுலகில் உள்ள தெய்வத்துக்கு இணையாகப் போற்றப்படுவான். இத்தகைய உயரிய மனித மாண்புகளைப் போற்றும் திருக்குறளைப் படித்து, அதன்படி நடப்பவர்கள் வாழ்வில் சகல நலங்களையும் பெறுவார்கள்.

இத்தகைய பெருமைமிகுந்த திருக்குறள் மாநாடு வடக்கு மாகாணத்தின் வவுனியாவில் நடைபெறுவது எமக்கு மிகுந்த பெருமையளிக்கிறது. இம்மாநாடு இங்கு நடைபெறுவதற்குக் காரணமான வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் அ.அற்புதராஜா பாராட்டுக்குரியவர். அவர் பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் ஒன்றிணைத்துபயணிக்கும்பலஆக்கபூர்வமானபணிகளைச் செய்து வருகின்றார். அவர் தனது பெயரைப் போலவே ஒரு “அற்புதமான” மனிதராகச் செயற்படுகின்றார்.” – என்றார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர்ஜெனரல்சாய்முரளி,வவுனியாபல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ.அற்புதராஜா, மொறிசியஸ் சர்வதேச திருக்குறள் மன்றத்தின் பொதுச் செயலாளரும் பேராசிரியருமான பாஞ். இராமலிங்கம், சர்வதேச தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் நிறுவுனரும் தலைவருமான மாவை.சோ.தங்கராசா, முன்னாள் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் 40 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதோடு, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் இதில் பங்கேற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.







# வடக்கிலிருந்து படைகளை அகற்ற தமிழ் மக்கள் விரும்பவில்லையாம்

## இப்படி முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகின்றார்



“வடக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களை முழுமையாக அகற்றுவதற்குத் தமிழர்களுக்கு விருப்பமில்லை. அவை இருப்பதே தமக்குப் பாதுகாப்பு என அவர்கள் கருதுகின்றனர்.”

– இவ்வாறு முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் அண்மைக்கால அரசியல் விவகாரங்கள் தொடர்பில், முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார். இதன்போதே, வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்கள் இராணுவ முகாம்களைத் தமது பாதுகாப்பாகக் கருதுகின்றனர் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தைப்பொங்கல் விழாவுக்காக யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி அநுர, தமிழ் மக்களின் மனங்களில் பிரிவினையை விதைத்துள்ளார். சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் எனக் காண்பிக்க முனைந்துள்ளார்.

தமிழர்களின் வாக்குகள் ஏனைய ஜனாதிபதிகளைவிட, ஜனாதிபதி அநுரவுக்கே அதிகமாகக் கிடைத்தன. எனவே, சிங்கள மக்களைக் காட்டிக் கொடுத்தாவது வடக்கைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி அநுர எண்ணுகின்றார்.

வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, தெற்கிலும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான வகையில் முகாம்களை அகற்றக்கூடாது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சிக் காலத்தில் முகாம்களின் எண்ணிக்கையை நாமும் குறைத்தோம். ஆனால், முற்றாக நீக்காமல் தேவையானவற்றைத் தக்கவைத்தோம். ஏனெனில், இராணுவ முகாம்கள் அவசியமானவை.

சில தமிழ் அரசியல்வாதிகள் வலியுறுத்தினாலும் வடக்கிலிருந்து படைகளை முழுமையாக வெளியேற்ற அங்குள்ள மக்கள் விரும்பவில்லை.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையானளவு படைகள் இருக்க வேண்டும். தேவையானவைதான் வடக்கில் உள்ளன. அவற்றை அகற்றக் கூடாது.” – என்றார்.

# “என்று தணியும் சுதந்திரத் தாகம்” யாழில் 4ஆம் திகதி கருத்தரங்கு








“என்று தணியும் சுதந்திரத் தாகம்” என்ற தலைப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து விசேட கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள வை.எம்.சி. மண்டபத்தில் இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி, மாலை 3 மணி தொடக்கம் 5 மணிவரை இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.சிறீகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், அரசியல் விமர்சகர் நிலாந்தன் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர் இடாப்பு மீளாய்வு ஆரம்பம்!




வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகளை இலங்கைத் தேர்தல்கள் திணைக்களம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. நாடு முழுவதும் இந்தப் பணிகள் இடம்பெறவுள்ளன.

தகுதியுள்ள அனைத்து மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் வகையில், அவ்வப்போது வாக்காளர் பட்டியல் மீளாய்வுக்கு உட்படுவது வழமையாகும். இந்த வருடத்துக்கான மீளாய்வு நடவடிக்கைகளே நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளன.

இதன்படி, கிராம உத்தியோகத்தர்கள், தேர்தல் திணைக்களப் பணியாளர்கள் இணைந்து வீடு வீடாக மக்களின் விவரங்களைத் திரட்டவுள்ளனர்.

எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியாகும் அனைவரையும் உள்ளடக்கியே இந்த வாக்காளர் மறுசீரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 15 ஆயிரம் சிவில் பாதுகாப்புப் பணியாளர்கள் வனவிலங்கு, பொலிஸ் துறைகளுக்கு மாற்றம்

இலங்கைசிவில்பாதுகாப்புத்திணைக்களத்தைச் சேர்ந்த 15 ஆயிரம் பணியாளர்களை வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் பொலிஸ் திணைக்களங்களுக்கு மாற்ற அரசு தீர்மானித்துள்ளது.

எனினும், இந்தத் திணைக்களம் கலைக்கப்படமாட்டாது எனப்பொதுப்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெளிவுபடுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் மொத்தமுள்ள 32 ஆயிரம் பணியாளர்களில் சுமார் பாதிப் பேர் தற்போது புதிய கடமைகளுக்காக மாற்றப்படுகின்றனர். 5 ஆயிரம் அதிகாரிகள் வன உத்தியோகத்தர்களாக மாற்றப்படுவர்.

இது நாட்டில் அதிகரித்து வரும் மனித-யானை மோதல்களைக் கட்டுப்படுத்தவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் உதவும்.

10 ஆயிரம் அதிகாரிகள் பொலிஸ் திணைக்களத்தில் பாதுகாப்பு மற்றும் காவல் பணிகளுக்காக இணைக்கப்படவுள்ளனர்.

தற்போது பொலிஸ் துறையில் நிலவும் 30 ஆயிரம் பணியாளர் வெற்றிடங்களை நிரப்ப இது உதவும்.

யுத்த காலத்தில் கிராமங்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட இந்தத் திணைக்களத்தின் தற்போதைய தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்த மறுசீரமைப்பு செய்யப்படுகின்றது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் கலைக்கப்படவில்லை. மாறாக அதன் வளங்கள் திறம்பட மீள் விநியோகம் செய்யப்படுகின்றன.

வரி செலுத்துவோர் மீது மேலதிக சுமையை ஏற்றாமல், இருக்கும் வளங்களைக் கொண்டே ஏனைய திணைக்களங்களின் பணியாளர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்கின்றோம்.

இந்த இடமாற்றங்கள் காரணமாக எந்தவொரு அதிகாரியின் வேலைப் பாதுகாப்பும் பாதிக்கப்படாது.



மாற்றப்பட்ட பணியாளர்கள் தவிர எஞ்சியுள்ள அதிகாரிகள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் தொடர்ந்து இயங்குவார்கள் மற்றும் அதன் விசேட திட்டங்களைக் கவனிப்பார்கள்.

இந்த நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கான சட்ட ரீதியான ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

யுத்தத்துக்குப் பின்னரான தற்போதைய சூழலில், நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பை நவீன சவால்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் முயற்சியாக இது பார்க்கப்படுகின்றது.” – என்றார்.

# ரணில் மீதான வழக்கில் சட்டப்படி நடந்தது சி.ஐ.டி.

## அமைச்சர் ஆனந்த விஜேபால உறுதி

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள நிதி மோசடி வழக்கில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டுகளைப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நிராகரித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது இலண்டனிலுள்ள வொல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்திற்கு மேற்கொண்ட பயணம் தொடர்பானதே இந்தச் சர்ச்சையாகும்.

அவரது மனைவி பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க கௌரவப் பட்டம் பெறும் நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற இந்தப் பயணம், ஒரு தனியார் பயணமாக இருந்தபோதிலும், சுமார் ரூ. 16.6 மில்லியன் முதல் ரூ. 16.9 மில்லியன் வரையிலான அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, பின்னர் மருத்துவக் காரணங்களுக்காகப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்க சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன மற்றும் அனுஜ பிரேமரத்ன ஆகியோர் சி.ஐ.டியின் செயற்பாடுகளைக் கடுமையாகச் சாடினர்.



பல்கலைக்கழகத்தின் அழைப்பிதழ் உண்மையானதா என்பதை அறிய சி.ஐ.டி. மேற்கொண்ட இலண்டன் பயணம் தோல்வியடைந்தது என்றும் அவர்கள் கூறினர்.

வெளிநாட்டு விசாரணைகளுக்கு அவசியமான “பரஸ்பர சட்ட உதவிச் சட்டத்தை“ சி.ஐ.டி. பயன்படுத்தவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

இது ஒரு உத்தியோகபூர்வ பயணத்தின்நீடிப்புஎன்றும், ஜனாதிபதியுடன் பாதுகாப்புப் பிரிவினர் செல்வது இயல்பான ஒன்று என்றும் அவர்கள் வாதிட்டனர்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஆனந்த விஜேபால, சி.ஐ.டி. சுதந்திரமாகச் செயற்படும் அதிகாரம் கொண்டது எனத் தெரிவித்தார்.

சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் கருதினால், அதனை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கட்டும். இந்த விவகாரத்தில் இறுதி முடிவை நீதிமன்றமே எடுக்கும். ஒவ்வொரு சிறிய விசாரணைக்கும் சட்டமா அதிபரிடம் அனுமதி பெற வேண்டிய அவசியம் சி.ஐ.டிக்கு இல்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த வழக்கின் விசாரணை 90 வீதம் நிறைவடைந்துள்ளது என்று மேலதிக மன்றாடியர் நாயகம் திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அடுத்த விசாரணையின் போது, சர்ச்சைக்குரிய அழைப்பிதழின் உண்மைத்தன்மை குறித்த இறுதி அறிக்கையைச் சி.ஐ.டி. சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரணிலுக்கு எதிராக முறையான குற்றப்பத்திரிகை எதிர்வரும் மார்ச் மாதம் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகின்றது

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிக்கடி போதித்தார்.

'எப்பவோ முடிந்த காரியம்'(எல்லாம் இறைவன் செயல். எப்போதோ தீர்மானிக்கப்பட்டது), 'சும்மா இரு' (மனதை அடக்கி இறைவனோடு இரு), 'முற்றும் உண்மை' (எல்லாம் உண்மை), 'ஒரு பொல்லாப்புமில்லை'(எதுவும் தீமையில்லை) என்பவை அவை.

இதில் 'எப்பவோ முடிந்த காரியம்' என்பது முக்கியமான ஒன்றாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்த மாட்டாது என்பது யோகர் சுவாமியின் மகா வாக்கியத்தில் கூறுவதானால் எப்பவோ முடிந்த காரியம்தான்.

2024 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த பெருவெற்றிகள், அடுத்த ஆண்டில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அடிபட்ட போதே, மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் அக்கட்சிக்கு அறவே அகன்று விட்டது என்பது அரசியலில் அரிச்சுவடி படித்தவர்களுக்கும் தெரிந்ததுதான்.

முதல் இரண்டு தேர்தல்களிலும் ஆரவாரமாகப் பங்கு பற்றிய தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி மூன்றாவது தேர்தல் - உள்ளூராட்சி தேர்தல் - பின்னடைவோடு படுத்துவிட்டது.

அப்போதே, இனி மாகாண சபைத் தேர்தலை இந்த அரசு நடத்தாது, சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்பது விளங்கியதுதான்.

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய போது மாகாண சபை தேர்தல் தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாடு யாது என்று அவர் தமிழ் தலைவர்களிடம் கேட்டார்.

அடுத்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் என்பதுதான் ஜனாதிபதியின் நிலைப்பாடு எனத் தமிழ் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்ட போது அமைச்சர் ஜெய்சங்கர் குறுக்கிட்டார்.

"ஜனாதிபதி எந்த ஆண்டில் இருந்து கொண்டு அடுத்த ஆண்டில் தேர்தல் என்று குறிப்பிடுகிறார்?" - என இந்திய வெளிவிகார அமைச்சர் 'ஸ்மார்ட்டாக' கேள்வி எழுப்பினார். அதற்கு சுமந்திரன் பதில் தந்தார்.

"2024 இல் ஜனாதிபதி பதவி ஏற்ற சமயம் அடுத்த ஆண்டில் தேர்தல் என்றார் ஜனாதிபதி. பின்னர் 2025 இல் வந்து நின்று கொண்டு அடுத்த ஆண்டில் தேர்தல் என்கிறார். எப்போது தேர்தல் நடக்கும் என்பது தெரியவில்லை. 2026 இல் வந்து அப்போதும் அடுத்த ஆண்டில் தேர்தல் எனப் புதுக் கதை விடுவாரோ என்னவோ...?" என்றார் சுமந்திரன்.

கடந்த ஆண்டு இறுதியில் இந்திய வெளிவிகார அமைச்சரிடம் சுமந்திரன் சந்தேகமாகக் குறிப்பிட்ட விடயம் அடுத்த ஆண்டு ஜனவரி முடிவடைவதற்கு முன்னரே உறுதியாகிவிட்டது.

மாகாண சபை தேர்தல்களைத் திட்டமிட்டபடி இந்த ஆண்டில் நடத்துவது சாத்தியமற்றது என்பதை இப்போது 2026 என் ஆரம்பத்திலேயே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கோடி காட்டி விட்டார்.

அப்படியானால் அரசின் உத்தேச திட்டம் என்ன?

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் உருவாக்கத்தின் பின்னர் தமது அரசியல் தேவைக்காக அந்த அரசமைப்பை கொண்டு வந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன சில சித்து விளையாட்டுக்களைக் காட்டினார். அதைத் திரும்பவும் செய்யக் கூடிய வலிமை நிலையில் தான் இருக்கின்றது என அநுர குமார திஸநாயக்க அரசு கருதுகின்றது. அதனைப் பயன்படுத்தி தேர்தல்களை முடக்கும் திட்டம் ஒன்றை தேசிய மக்கள் சக்தி மனதில் கொண்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த அரசியல் சதித்திட்டம் யாது என்பதை அடுத்து வரும் தினங்களில் பார்ப்போம்.

---

## கிவுல் ஓயா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணிக்கு நெடுங்கேணி பஸ் நிலையம் முன்பாக ஒன்று கூடும் போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக நெடுங்கேணி பிரதேச செயலகம் வரை நகர்ந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பர். போராட்டத்தின் நிறைவில் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, சிறீ ரெலோ உள்ளிட்ட அரசியல் கட்சிகள், வன்னி மாவட்ட பொது அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை மையப்படுத்தி கிவுல் ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த மாவட்டங்களுக்குத் தண்ணீரை இலகுவாகக் கிடைக்கச் செய்யும் நோக்கில் - மகாவலி எல் வலயத்தின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் பூர்வீக நிலப் பகுதிகள் பெருமளவில் பறிபோகும் என்பதுடன் குடியேற்றங்கள் மூலமாக குடிப்பரம்பலும் திட்டமிட்டமுறையில் மாற்றியமைக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

2011ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம்எதிர்ப்புகள்மற்றும்நிதிப்பிரச்சினையால் கிடப்பில் போடப்பட்டது. இந்தநிலையில், இந்தத் திட்டத்தை 2 ஆயிரத்து 350 கோடி ரூபாவில் செயற்படுத்தத் தற்போதைய அரசு திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## தமிழ்க் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'முரசு' டிஜிட்டல் "INSIDE" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1994ஆம் ஆண்டிலிருந்து கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவி வகித்து வந்தேன். கடந்த பொதுத் தேர்தலில் பின்னடைவைச் சந்தித்துள்ளேன். அதை நான் ஒரு சறுக்கலாகவே கருதுகின்றேன் தோல்வியாக அல்ல. வருங்காலத்தில் மக்கள் நல்ல தீர்ப்பை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது." - என்றார்.

தனது அண்மைய கைது குறித்து கருத்துத் தெரிவித்த அவர், "என் கைது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால், இது தொடர்பாக மேலதிகமாக எதுவும் கூற விரும்பவில்லை. எனினும், நீதி வெல்லும்; உண்மை விரைவில் வெளிவரும் என நம்புகின்றேன்." - என்றார்.

மேலும் அவர் கூறுகையில்,

"சக தமிழ்க் கட்சிகளுக்கும் எனக்கும் இடையில் நேச முரண்பாடே உள்ளது; பகைமை இல்லை. எனினும், சில தமிழ்க் கட்சிகள் என் மீது காழ்ப்புணர்ச்சி அரசியலுடன், பயத்தின் அடிப்படையில் செயற்படுகின்றன." - என்றார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமா என்பது குறித்து உறுதி இல்லை எனக் குறிப்பிட்ட அவர், "எனினும், அரசு உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவது நல்லது." - என்றார்.

மேலும், "எனது கட்சியை மேலும் செழுமைப்படுத்தி, வலுப்படுத்தி முன்னோக்கி கொண்டு செல்வதே எனது பிரதான நோக்கம்." - என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

**முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 'முரசு' டிஜிட்டல் "INSIDE" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவரிடம் கேட்கப்பட்ட முக்கிய வினாக்களுக்கு வழங்கிய தெளிவான பதில்களை முழுமையாகக் காணொளியில் பார்வையிடலாம்.**

CLICK HERE VIDEO

---

## தமிழ் இனப் பரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"படிப்படியாக நாங்கள் காணிகளை இழந்து வருகின்றோம். கிழக்கு மாகாணத்தில் பெரியளவு காணிகள் இழக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்திலும் இந்த விடயம் பல்வேறு இடங்களில் நடந்துள்ளது - நடக்கின்றது.

அனைத்து தமிழ் மக்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். அரசுக்கு எமது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும்." - என்றார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் எதிர்வரும் சுதந்திர தினத்தன்று நடைபெறவுள்ள கரிநாள் போராட்டங்களிலும் அனைத்து தமிழ் மக்களும் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஒன்றுபட்டு எதிர்ப்போம்!

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாகவே கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் அமைகின்றது என்பதைத் தமிழர் தரப்பில் பல அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழர் தாயகமான வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் விதத்தில், மகாவலி ‘எல்’ வலயத்தின் கீழ் மணலாறை (வெலிஓயாவை) அண்டி சிங்களக் குடியேற்றங்கள் சில தசாப்தங்களுக்கு முன்னர் கொழும்பு அரசினால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட சமயத்திலேயே அந்தப் பகுதிக்கு மகாவலி நீர் வருவதற்கு வாய்ப்பில்லை, ஆனால் அதன் பெயரில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துகிறீர்கள் என்று தமிழர்கள் ஆட்சேபித்தார்கள்.

அது இப்போது நிரூபணமாகிவிட்டது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஜனத்தொகைப் பரம்பல் விகிதத்தை தமிழருக்கு எதிராக - சிங்களவர்களுக்குச் சார்பானதாக - மாற்றி அமைக்கும் ஒரே நோக்கோடு இந்த குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பது வெளிப்படையானது.

இப்போது அவ்வாறு குடியேற்றிய மக்களுக்கு மகாவலி நீர் கிட்டாது என்பது உறுதியானதும், வன்னியில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் பூர்வீகக் கிராமங்கள் பலவற்றை நீர்த்தேக்கம் என்ற பெயரில் தண்ணீரில் மூழ்கடித்து, அதன் மூலம் முன்னர் குடியேற்றிய சிங்களவர்களுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளத் திட்டமிடப்படுகின்றது.

அருகில் இருக்கும் வெடுக்குநாறிமலைப் பிரதேசத்தில் தொல்லியல் பாதுகாப்பு என்ற பெயரில் தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கப்படுகின்றன. கெடுபிடி காட்டப்படுகின்றது. ஆனால் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள 47 தொல்லியல் பிரதேசங்களை நீரில் மூழ்கடித்து கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இது விசித்திரமானது.

தமிழர் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மை போக்கு விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி அரசும் அதற்கு முன் வந்த அரசுகளிலிருந்து வேறுபட்டது அல்ல என்பதுதான் இந்தத் திட்டத்தின் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர் பிரதேச உள்ளூராட்சி சபைகள் இந்தத் திட்டத்தை ஆட்சேபிக்கும் பிரேரணைகளை கொண்டு வரும் போது தமிழர்களான தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அவற்றை எதிர்ப்பது விந்தையிலும் விந்தை. தங்களைத் தமிழர்கள் என்று குறிப்பிடுவதற்கு தகுதியற்ற உறுப்பினர்கள் அவர்கள்.

கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டத்துக்கு எதிராக தமிழர்கள் இன்று முன்னெடுக்கும் எதிர்ப்புப் போராட்டத்துக்கு சகல தமிழர்களும் ஆதரவளிப்பது அவர்களது வரலாற்றுக் கடமையாகும்.

# கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாக ‘கிவுல் ஓயா’ திட்டம்

## வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவிப்பு









**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாக ‘கிவுல் ஓயா’ நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் அமைகிறது. ‘நாட்டின் அபிவிருத்தி’ என்ற பெயரில் வட மாகாணத்தில் – குறிப்பாக முல்லைத் தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களை மையமாகக் கொண்டு – முன்னெடுக்கப் படும் “கிவுல் ஓயா” நீர்த்தேக்க மேம் பாட்டுத் திட்டம் உறுதிமொழிகளுக்கு முரணானதாக அமைந்துள்ளது என வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத் தரங்கு வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கிழக்கு மாகாண ஓய்வு பெற்ற முன்னாள் காணி ஆணை யாளர் கதிர்காமத்தம்பி குருநாதன், வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் கலந்து கொண்ட னர்.

மேலும் மன்னார்,வவுனியா, முல் லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து பொது மக்கள் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை உப தவிசாளர், வவுனியா வடக்கு, கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பி னர்கள், கிவுல் ஓயா திட்டத்தால் பாதிக்கப் படும் மக்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வு முடிவடைந்த நிலையில்,வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டவை வருமாறு:–

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாக ‘கிவுல் ஓயா’ நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் அமைகின்றது.

இலங்கையின் தற்போதைய அரசாங் கம், சிறுபான்மையின மக்களின் பாது காப்பு, இயற்கை வளங்களின் பாது காப்பு மற்றும் சமத்துவமான அபிவிருத்தி என்பவற்றை தனது கொள்கை உறுதி மொழிகளாக முன்வைத்து ஆட்சி பொறுப் பேற்றுள்ளது.

இருப்பினும், ‘நாட்டின் அபிவிருத்தி’ என்ற பெயரில் வட மாகாணத்தில், குறிப் பாக முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் ‘கிவுல் ஓயா’ நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம், இந்த உறுதிமொழிகளுக்கு முரணானதாக

தொடர்ச்சி ▼

# கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாக 'கிவுல் ஓயா' திட்டம்




தொடர்ச்சி ▲

அமைந்துள்ளமை குறித்து ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

நாங்கள் இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் எந்தவொரு அபிவிருத்தி திட்டத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். அபிவிருத்தி என்பது நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமமாகப் பயனளிக்க வேண்டிய ஓர் அடிப்படை அரசுப் பொறுப்பாகும். இருப்பினும், அபிவிருத்தி என்ற போர்வையில் அரசின் காலனித்துவ நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில், காணி இல்லாத தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய சூழலில், இம்மக்களை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமையுடன் இணைத்து, அவர்களின் வாழ்வாதார நிலைகளை உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அரசாங்கம், அதனை விடுத்து வெளி பிரதேசங்களில் இருந்து மக்களைக் கொண்டு வந்து இப்பிரதேசங்களில் குடியேற்றும் செயற்பாடுகளை முன்னெடுப்பது கவலைக்குரியதாக உள்ளது.

இவ்வாறான குடியேற்றங்கள் தேவையற்ற அரசியல், கலாசார மற்றும் சமூகத் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மகாவலி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள திட்ட அறிக்கையின் படி, 'கிவுல் ஓயா' நீர்த்தேக்கம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில், தமிழர்களின் பூர்வீகக் கிராமமான வெடிவைத்த கல்லு கிராமத்திற்கு அண்மையாக, வடகிழக்கு திசையில் அமைக்கப்படவுள்ளது.

சுமார் 37 மீற்றர் (121.37 அடிகள்) உயரமுடைய அணையின் மூலம் உருவாக்கப்படவுள்ள இந்த நீர்த்தேக்கம், பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது, இந்த நீர் தேக்கத்திற்கான எல்லைகள் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வெடிவைத்தகல் பகுதியில் மகாவலி அதிகார சபையினால் எல்லைக் கல்லிடப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

இதன்விளைவாக, கல்லு,ஈச்சங்குளம்,கூழாங்குளம்,காட்டு பூவரசங்குளம், காஞ்சூரமோட்டை உள்ளிட்ட பாரம்பரிய கிராமங்களின் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்கள் முழுமையாக நீரில் மூழ்கும் அபாய நிலை உருவாகியுள்ளது.

மேலும், 1921 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 'ஒதுக்குக் காடாக' அறிவிக்கப்பட்ட கட்டிக்குளம் ஒதுக்குக்காடு, சுமார் 4,000 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகும். இந்தப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியும், கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தின் கீழ் முழுமையாக அமிழ்ந்து போகும் நிலை உருவாகியுள்ளமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் தீவிரமான கேள்விகளை எழுப்புகிறது.

அதேபோல், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அடையாளப்படுத்தப்பட்ட 47 தொல்லியல் பிரதேசங்கள், கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தின் நீரில் மூழ்க போவதாக மகாவலி அதிகார சபையின் சொந்த திட்ட ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. இது, நாட்டின் மரபுரிமை மற்றும் தொல்லியல் பாதுகாப்பு கொள்கைகள் ஒரே மாதிரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை இது உருவாக்குகிறது.

இத்தகைய பின்னணியில். இந்த நீர்த்தேக்கத்திற்கு அண்மையில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலைப் பிரதேசத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதை 'தொல்லியல் பாதுகாப்பு' என்ற பெயரில் கட்டுப்படுத்தும் நிலையில், அதே சமயம் பல தொல்லியல் பிரதேசங்கள் முழுமையாக அழிவடைய அனுமதிக்கப்படுவது தொடர்பில் தெளிவான, வெளிப்படையான விளக்கங்கள் அரச நிறுவனங்களால் வழங்கப்பட வேண்டும்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய

ஆமையன் குளம், உந்தராயன் குளம், அடையகர்த்தான், படுகாட்டுக் குளம், சாம்பான் குளம் போன்ற பகுதிகளில் உள்ள சுமார் 2,000 ஏக்கர் வளமான விவசாய நிலங்கள் ஏற்கனவே அபகரிக்கப்பட்டுள்ளமை பதிவுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனுடன், கொக்குத்தொடுவாய் சூரிய நாற்றுப் பகுதியில், தமிழ் மக்களுக்கு மத்திய வகுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1,990 ஏக்கர் காணிகள், தற்போது கிவுல் ஓயா திட்டத்தில் உள்வாங்கப்பட்டு திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இது,இப்பிரதேசங்களில் இனப்பரம்பல் அமைப்பையும், சமூகச் சமநிலையையும் மாற்றக்கூடிய ஒரு நவீன காலனித்துவ செயல்முறையாக பார்க்கப்படுகிறது.

எனவே, அரசு உடனடியாக இத் திட்டத்தின் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பண்பாட்டு தாக்கங்களை மீளாய்வு செய்யவும், உள்ளூர், காணி இல்லாத தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அபிவிருத்தி திட்டங்களில் முன்னுரிமை உடன் இணைக்கவும், வெளிப்பிரதேச குடியேற்றங்களை தவிர்க்கவும், உள்ளூர் சமூகங்களின் காணி, வாழ்வாதாரம் மற்றும் அடையாளங்களை பாதுகாக்கவும் தெளிவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் நிலையான அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் உருவாக வேண்டுமானால், அது உள்ளூர் மக்களின் உரிமைகள், மரியாதை மற்றும் வரலாற்றுப் பிணைப்புகளை மதிக்கும் அணுகுமுறையின் மூலம் சாத்தியமாகும் என்பதை அரசிற்கு தெளிவாக சுட்டிக்காட்டுகிறோம். – என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலட்சியத்தை வெல்லப் புலிகளுக்கு இனிமேலாவது வாய்ப்புத் தாருங்கள்!

## புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் கட்சியின் தலைவர் இன்பராசா கோரிக்கை

(கி.வசந்தன்)




தமிழ் மக்கள் இலட்சியத்தை வெல்ல இனிமேலாவது போராளிகளை ஆதரிக்க வேண்டும் என்று புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராசா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரவித்த அவர் –

தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியான போராட்டம் 75 வருடங்களையும் தாண்டி நிற்கின்றது. ஆனால், இதுவரை எமது அரசியல் ரீதியான அபிலாசைகளை வென்றெடுத்துள்ளோமா என்ற கேள்வியும், இனியும் வென்றெடுக்க முடியுமா என்ற சந்தேகமுமே இருக்கின்றன. காலா காலமாக சிங்களப் பேரினவாதம் எம்மை ஏமாற்றியதை விட எமது வாக்குகளால் வந்த தமிழ் அரசியல்வாதிகளே எமது மக்களைக் கூறு போட்டு சின்னாபின்ன மாக்கி, அரசியால் அநாதைகளாக்கி, இன்று மக்களே வீதியில் இறங்கி போராடு மளவிற்கு ஏமாற்றத்துக்குள்ளாக்கி இருக்கின்றார்கள்.

எமது தேசியத் தலைவரின் 35 வருடங்களுக்கு மேலான ஆயுதப் போராட்டத்தில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக நாமும் இணைந்து போராடியிருக்கின்றோம். நாங்கள் எமது தேசியத் தலைவரோடு தோளோடு தோள் நின்று மரணித்த மாவீரர்களின் இலட்சியப் பாதையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இன்று ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் துணிந்துள்ளோம்.

போராட்டத்தையும், போராளிகளையும் வைத்து அரசியல் செய்யும் எமது அரசியல்வாதிகள் இன்று சுகபோக வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். மனைவி பிள்ளைகளை வெளிநாடுகளில் பாதுகாப்பாக இருத்திவிட்டு இங்கு அரசியலுக்காக மாத்திரம் அவர்கள் செயற்படுகின்றார்கள். இவ்வாறான அரசியல்வாதிகள் இதுவரை தங்களுக்கான சொத்துக்களைச் சேர்த்தார்களே தவிர, எமது மக்களுக்கு எள்ளளவிலான எந்த வொரு விடயத்தையும் முன்னெடுக்க வில்லை.

இந்தநிலையிலே தான் “கொண்ட இலட்சியம் கொண்டதான கொள்கை வீரனின் காலடி மண்ணிலே நின்று போர்க்கொடி துக்கிய போராளிகள்” எமது தேசியத் தலைவருக்கு எந்த விதத்திலும் துரோகமிழைக்காமல் 2009 இறுதி வரைக்கும் உறுதியாக நின்று வந்த போராளிகள் நாங்கள். அதே வழியில் இன்று ஜனநாயக ரீதியில் எமது மக்களுக்காக முன்வந்துள்ளோம்.

புலம்பெயர் உறவுகள் இதனை நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். நீங்கள் தாயகத்திலுள்ள உறவுகளிடம் முன்னாள் போராளிகளுக்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

எதிர்வருகின்ற தேர்தல்களில் எமது காவல் தெய்வங்களாக நின்ற போராளிகளுக்கு வாய்ப்பை வழங்குவதற்கு முன்வாருங்கள். இதுவரை அரசியல் சாக்கடையாளர்களுக்குக் கொடுத்த வாய்ப்புகள் போதுமானது. அதில் சிறிய அளவிலேனும் போராளிகளை நம்பி ஒப்படையுங்கள்.

போராளிகள் மூலமே தமிழ் மக்களுக்கான விடுதலையை அடைய முடியும் என்று களத்தில் நின்று காட்டியவர்கள் நாங்கள். அரசியல் எங்களுக்குப் புதியதல்ல. புலத்திலுள்ள மக்கள் போராளிகள் மீது நம்பிக்கை வைத்து தாயக மக்களூடாக ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதே மாவீரச் செல்வங்களுக்கும், தேசியத் தலைவருக்கும் போராடிய போராளிகளுக்கும் செய்கின்ற நன்றிக்கடன்.

எனவே எமது மக்கள் உங்கள் வாக்குகள் மூலம் புலிகளை உயரிய சபைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதன் மூலமே அங்கேயுள்ள எலிகளை நடுநடுங்க வைக்க முடியும். போராட்டத்தைக் கூறு போட்டு, இலட்சியத்தை மண்ணோடு மண்ணாக்கிக் கொண்டு “ஒரு நாடு இரு தேசம்” என்ற போலி வேடங்களை அணிந்து இறுதி யுத்தத்தின் ஒரு சாட்சியங்களைக் கூட வெளிநாடுகளுக்குச் சென்று சொல்லாத தேசியவாதிகள் இன்று சமஷ்டி என்று இந்தியாவின் காலடியிலும், “ஒரு நாடு இரு தேசம்” என்று புலம்பெயர் தேசங்களுக்கும் சென்று வருகின்றார்கள்.

இதே நிலை தொடருமானால் கடந்த காலங்களில் அல்பிரட் துரையாப்பா, லக்ஷ்மன் கதிர்காமர், நீலன் திருச்செல்வம், கூட்டமைப்பில் இரா.சம்பந்தன், சுமந்திரன் உள்ளிட்டவர்கள் எமது போராட்டத்தை மழுங்கடிப்பது போன்று அதே வழியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் உலகெங்கும் பொய்ப்பிரசாரம் செய்துமக்களிடமிருந்தும், புலம்பெயர் அமைப்புகளிடமிருந்தும் நிதிகளைப் பெற்று வேறு ஒரு நிகழ்ச்சி நிரலில் நின்று செயற்பட்டு வருகின்றார்கள். இதனை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இன்று தேசியம் பேசும் அத்தனை பேரும் எமக்குத் துரோகம் செய்தவர்களே. நாங்கள் மீண்டும் மீண்டும் எமது மக்களிடம் கேட்பது போராளிகளுக்கான வாய்ப்பினைத் தரவேண்டும். காலாகாலமாகப் புலிகள் அரசியல் ரீதியாகத் தோற்றுப் போகும் விடயம் நடக்கக் கூடாது. இவ்வாறு தோற்பது எதிரிகளுக்கே வெற்றி. இதன் மூலம் விடுதலைப் புலிகளை மக்கள் இன்று ஏற்றுக் கொள்ளவில்லை என்பதாகவே வெளிப்படுத்துவார்கள்.

அதன்மூலம் புலிகள் மக்கள் அமைப்பு என்பதைத் தாண்டி ஒரு பங்கரவாத அமைப்பு என்ற நிலைப்பாட்டுக்கு இன்னும் உறுதித் தன்மையை ஏற்படுத்தப்பட்டு விடும். எனவே புலம்பெயர்ந்த உறவுகளே, உங்களது ஆலோசனைகள், நிதியுதவிகள், மக்கள் ஆதரவுகள், போராளிகளுக்குத் தேவை. இந்த முறை நீங்கள் எமக்கு வழங்கும் ஆதரவின் மூலமே நாங்கள் ஒரு வெற்றியைக் காணலாம்.

எமது பலம் என்னவென்பதை மீண்டும் இந்த உலகிற்கு ஜனநாயக வழியில் வெளிப்படுத்த வேண்டும். போராளிகள் ஒதுங்கி நிற்பதென்பதும் மாவீரர்களுக்குச் செய்யும் ஒருவகையான துரோகமே யாகும். எனவே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் போராளிகளை முன்நிறுத்துவதற்கான முனைப்புகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மாற்றம் என்று சொல்லி வந்த தற்போதைய அரசாங்கமும் இது வரையில் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலும், தமிழ் இன அழிப்புக்கான நீதி மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம், வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் அத்துமீறிய நில ஆக்கிரமிப்புகள் தொடர்பில் எதுவித கரிசனையும் இல்லாமல் இருக்கின்றது.

தமிழ் மக்கள் தொடர்பில் தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய அரசு இன்று தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படும் போது மௌனமாக இருந்து வருகின்றது. இந்த அரசை நம்பி வாக்களித்த தமிழ் மக்கள் இன்று மிகவும் ஏமாற்றமடைந்த நிலையிலேயே இருக்கின்றனர்.

எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதி நடாத்தும் கரிநாள் போராட்டத்திற்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் எமது முழுமையான ஆதரவினை வழங்குவதுடன், போராட்டங்களில் எமது கட்சி உறுப்பினர்களையும், பொதுமக்களையும் கலந்து வலுச்சேர்க்குமாறு உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்களுக்கான எந்தவொரு விடயத்திலும் முன்னாள் போராளிகள் ஒருபோதும் பின்நிற்க மாட்டார்கள். அன்றும் இன்றும் என்றும் எமது மக்களுக்காக போராளிகளாகிய நாம் முன்நிற்போம் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்றார்.

# மக்களின் ஆணையை அவமதிக்கும் ஒரு நடவடிக்கைதான் பிரஜா சக்தி

## ஆழியவளையில் சுமந்திரன் விளக்கம்




(மரியசீலன் திலைக்ஸ்)

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட பிரஜா சக்தி முறைமை மக்களுடைய ஆணையை அவமதிக்கும் ஒரு செயலென தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஆழியவளை சக்தி அம்மன் ஆலய அன்னதான மண்டபத்தை திறந்துவைத்து உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

குடிமக்கள் மத்தியில் தங்களுடைய கட்சியை கொண்டு வந்து பொருத்துவதற்காக, நாட்டில் ஒரு கட்சி ஆட்சியை நிலை நிறுத்துவதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையிலே அதற்கு மாற்றீடாக இந்த பிரஜா சக்தியைக் கொண்டு வருகிறார்கள்

அண்மையில் பருத்தித்துறை பிரதேசசபையில் பிரஜா சக்திக்கு எதிரான விவாதத்தில் எமது உறுப்பினர்கள் சிறப்பாக செயற்பட்டார்கள்.அவர்களை பாராட்டுகின்றேன்.

நாங்கள் ஏன் இந்த பிரஜா சக்தி முறையை எதிர்க்கிறோம் என்றால் நீங்கள் எல்லாம் வாக்களித்து, மக்களுடைய வாக்கு பலத்தாலே மக்கள் அமைத்திருக்கின்ற உள்ளூராட்சி என்ற சபையை கைவிட்டு, அதற்குப் பதிலாக தங்களுடைய பிரஜா சக்தியை கொண்டு வந்து புகுத்துவதை மக்களாலே தெரிவு செய்யப்பட்ட சபைகள் கண்டிக்கின்றன.

நாங்கள் பிரஜா சக்தி அமைப்பை கண்டிக்கிறோம் என்பது இங்கே வருகின்ற அபிவிருத்திகளை வேண்டாம் என்று சொல்வதல்ல. அபிவிருத்தி மக்களுடைய அபிவிருத்தியாக இருக்க வேண்டும். மக்கள் தீர்மானிப்பதுதான் அதற்குரிய உகந்த அபிவிருத்தி.

மக்கள் தீர்மானிப்பதுதான் அபிவிருத்தி என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்தான் அந்த அபிவிருத்தியை தீர்மானிக்க வேண்டும். அதுதான் பிரஜா சக்தியாக இருக்க வேண்டும்

மக்களிடத்தில் இதனை நாங்கள் தெளிவுபடுத்த வேண்டும் நாங்கள் அபிவிருத்திகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அபிவிருத்திகள் சரியான முறையில், சரியானவர்களால், மக்கள் பிரதிநிதிகளால் செய்யப்பட வேண்டும். இல்லை என்று சொன்னால் அது பிரஜா சக்தி கிடையாது. – என அவர் தெரிவித்தார்.

# கருக்காமுனை – புன்னையடி இடையே படகு பாதை சேவை

## திருமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்



(எஸ்.கீதபொன்கலன்)

வெருகல் பிரதேச சபைக்கு உட்பட்ட கருக்காமுனை,புன்னையடி கிராமங்களிற்கு இடையிலான 80 மீற்றர் நீளமான நீரேரிப்பகுதியில் புதிய படகுப் பாதை ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று நேற்று முன்தினம் நடைபெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புன்னையடித்துறையில் இருந்து இப்படகுப் பாதை சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உத்தேச செலவு மதிப்பீடு மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகளை தமது அமைச்சிற்கு விரைவாக சமர்ப்பிக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

சனிக்கிழமை திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்ரா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்குபற்றிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதி அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அத்தருணம் வெருகல் பிரதேச சபைத் தலைவரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றே மேற்படி கருக்காமுனை – புன்னையடி இடையிலான படகு பாதை சேவை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது புன்னையடித்தறையில் இருந்து பைபர் படகு மூலமே இரு பிரதேச மக்களும் நீரேரிப்பகுதியை கடந்து சென்று வருகின்றனர்.

இது பாதுகாப்பானது அல்ல. எனவே பாதுகாப்பான நிரந்தர படகுப்பாதை ஒன்று இப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பது இப்பிரதேச பொது மக்களின் நீண்டகால கோரிக்கையாகும்.






# பெப்ரவர் 4 கரிநாள் பேரணிக்கு சகலரும் ஆதரவு தர வேண்டும்!

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு

சுதந்திர தினத்துக்கு எதிராக வடக்கு கிழக்கில் நடைபெறவுள்ள கரி நாள் பேரணிக்கு அனைத்து தரப்புக்களும் பங்கேற்று வலுச்சேர்க்க வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்தனர்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், முகாமைத்துவ மற்றும் வணிக பீட மாணவர் ஒன்றியத்தினர் இதற்கு அழைப்பு விடுத்தனர்.

மேலும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதி நிதிகளும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவளிக்க அழைப்பு விடுத்தனர்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ம் திகதியை கரி நாளாக பிர கடனப்படுத்தி வடக்கு கிழக்கில் போராட் டத்தை நடத்த தீர்மானித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சில தினங் களாக அதற்கு பொதுமக்களை அணி திரட்டி வலுச்சேர்க்கும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.




# மேலும் ஒரு மாத காலத்திற்கு அவசரகால நிலைமை நீடிப்பு

## வர்த்தமானி வெளியிடப்பட்டது

நாட்டில் பொது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி வெளி யிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித் தல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதி பதி அநுர குமார திஸநாயக்க வின் உத்தரவுக்கமைய இந்த வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

பேரிடர் அனர்த்த நிலைமையைக் கருத்திற் கொண்டு, ஜனாதிபதியால் கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி பொதுப் பாதுகாப்பு, நாட்டின் நல் வாழ்வைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அவசிய மான விநியோகங்கள் மற்றும் சேவை களைப் பேணுதல் ஆகியவற்றைக் இலக்காகக் கொண்டு பொது அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட் டது.

இதனிடையே, 2025ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அவசரகால ஏற்பாடு கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பான கட்டளைகளைத் திருத்தம் செய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய அவசரகால கட்டளைகளுக் கிணங்க, இதற்கு முன்னர் நடை முறையிலிருந்த பல கட்டளைகளைத் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பல புதிய கட்டளைகளை அறிமுகப்படுத்த வும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசரகால நிலைப் பிரகடனத் துடன் அரச அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித் தும், அந்தக் கட்டளைகளுக்கு முரணா கச் செயற்படுபவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அந்தக் கட்டளைகளின் மூலம் விளக்கமளிக்கப்பட்டுள்ளது







# கொழும்பு புதுச்செட்டித்தெருவில் நேற்று ராதா கிருஷ்ணா ஆலயக் கும்பாபிஷேகம்

கொழும்பு புதுச்செட்டித்தெரு இலக்கம் 188 இல் அமைந்துள்ள ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலய பிராண பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் தைப்பூசத் தினமான நேற்று முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை ஆலயத்தலைவர் ஸ்ரீ மதஹாகர்த்த தாஸ் தலைமையில் நடைபெற்றது.

தலைமைக் குருக்கள் டாக்டர். ஆனந்த மாயா தாஸா ஆச்சாருயார், ஸ்ரீ ரங்க ராஜன் ஐயங்கார் முன்னிலையில் காலை 10.55 மணி முதல் 11.55 மணி வரையிலான சுப முகூர்த்த வேளையில் மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணன, ஸ்ரீ கௌரவ நிதாய், ஜெகநாத பலராம சுபத்ரா விக்கிரகங்களுக்கு திரவியங்களால் தயாரிக்கப்பட்ட பதார்த்தம் மூலம் அபிஷேகம் நடைபெற்றது.

நிகழ்வில் கஜமுகன் (யானை) ஆலயத்தின் உள்ளே சென்று ஆசீர்வதித்து வெளியேறுவதையும், 137 அடி உயர இராஜ கோபுரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதையும், மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் மூலஸ்தானத்தில் எழுந்தருளவுள்ள ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணர், ஸ்ரீ கௌர நிதாய், ஜெகநாத பலராம சுபத்ரா, இதர சந்நிதிகளில் பட்டாபிஷேக கோலத்தில் ஸ்ரீ சீதா ராம சமேத லட்சுமன ஆஞ்சநேய விபீஷணர், ஸ்ரீ பாலாஜி கருடாழ்வார், ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி ஸ்ரீ ஸ்ரீ சந்தான கோபால கிருஷ்ணர் ஆகியோருக்கு பூஜை நடைபெறுவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.













# நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை இந்த “பட்ஜெட்” பூர்த்தி செய்யும்!

## பிரதமர் நரேந்திர மோடி தெரிவிப்பு



2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய நமது பயணத்துக்கு இந்த பட்ஜெட் ஒரு அடித்தளம் என்று தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, இது நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் மத்திய பட்ஜெட் 2026 குறித்த தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இதில் பேசிய பிரதமர், “இந்த பட்ஜெட் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்தில் செயல்படும் தேசத்தின் உணர்வைப் பிரதிபலிக்கிறது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ஒரு பெண் நிதி அமைச்சராக, தொடர்ந்து ஒன்பதாவது முறையாக நாட்டின் பட்ஜெட்டைத் தாக்கல் செய்து ஒரு புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். இந்தப் பட்ஜெட் மகத்தான வாய்ப்புகளைக் கொண்டது.

இது நிகழ்காலத்தின் கனவுகளை நிறைவேற்றி, இந்தியாவின் பொன்னான எதிர்காலத்துக்கான அடித்தளத்தை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கான ஒரு வலுவான அடித்தளமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது.

இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள், இந்தப் பட்ஜெட் மூலம் புதிய ஆற்றலையும் புதிய உத்வேகத்தையும் பெறும். ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள், லட்சியம் நிறைந்த, திறமையான இளைஞர்களுக்குப் பெரிய வாய்ப்புகளை வழங்கியுள்ளன. இந்த பட்ஜெட் நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகம், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கட்டமைப்பு ஆகிய தொலைநோக்குப் பார்வைகளை உணர்த்துகிறது. நிதிப் பற்றாக்குறையைக் குறைத்தல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுடன், அதிக மூலதனச் செலவினத்துடன் உயர் வளர்ச்சியை உறுதி செய்வதில் கவனம் செலுத்தக்கூடிய ஒரு தனித்துவமான பட்ஜெட் இது.

இந்த பட்ஜெட் உலக அளவில் இந்தியாவின் பங்கை மேலும் வலுப்படுத்தும். வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக மட்டும் இருப்பதில் இந்தியா திருப்தி அடையவில்லை. விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதை நோக்கி உறுதியாகப் பயணித்து வருகிறது. இது கோடிக்கணக்கான இந்தியர்களின் கூட்டுத் தீர்மானம். ஒரு நம்பகமான ஜனநாயக நாடாகவும், தரமான பொருள்களை விநியோகிக்கும் நாடாகவும் இந்தியாவின் பங்கு தொடர்ச்சியாக வலுவடைந்து வருகிறது. இந்தியா அண்மையில் மேற்கொண்டுள்ள முக்கிய வர்த்தக ஒப்பந்தங்கள், நாட்டின் இளைஞர்களுக்கும் சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கும் அதிகபட்ச பலன்களை உறுதி செய்யும். அதன் ஒரு பகுதியாக இந்தப் பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.– என்றார்.

# இந்தியாவின் நெருக்கடிகள் குறித்து திருத்தம் செய்ய மறுக்கும் ”பட்ஜெட்”

## ராகுல் காந்தி தெரிவிப்பு



இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் குறித்து பார்வையற்ற, திருத்தங்களைச் செய்ய மறுக்கும் ஒரு பட்ஜெட் இது’ என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதுகுறித்து ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், ‘வேலையில்லாத இளைஞர்கள், சரிந்து வரும் உற்பத்தி, முதலீட்டை திரும்பப் பெறும் முதலீட்டாளர்கள், அதலபாதாளத்தில் விழும் குடும்ப சேமிப்புகள், துயரத்தில் உள்ள விவசாயிகள், வரவிருக்கும் உலகளாவ-ிய அதிர்ச்சிகள் ஆகிய அனைத்தும் இந்த பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் குறித்து பார்வையற்ற, திருத்தங்களைச் செய்ய மறுக்கும் ஒரு பட்ஜெட் இது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் கடினமான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கான தொலைநோக்குப் பார்வை இந்த பட்ஜெட்டில் இல்லை என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மோடி அரசாங்கத்திடம் யோசனைகள் தீர்ந்துவிட்டது. நமது விவசாயிகள் நலத்திட்டங்களுக்காக காத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் காணப்பட்டதை விட ஏற்றத்தாழ்வு அதிகரித்துவிட்டது, ஆனால் பட்ஜெட் அதைப் பற்றிக் குறிப்பிடக்கூட இல்லை. எஸ்சி, எஸ்டி, ஓபிசி, இடபிள்யூஎஸ் மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு இந்த பட்ஜெட்டில் எந்த ஆதரவும் வழங்கப்படவில்லை.

நாட்டின் உற்பத்தியில் மறுமலர்ச்சி இல்லை. நமது இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கான தீவிர திட்டம் இல்லை. ஏற்றுமதி சரிவை சந்தித்துள்ளது. சரிந்து வரும் ரூபாய் மதிப்பை சரிசெய்ய எந்த திட்டமும் இல்லை. ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்துக்கான பணவீக்கத்துக்கு நிவாரணம் இல்லை. நாட்டின் சேமிப்பு வீழ்ந்து, கடன் உயர்ந்துள்ளது குறித்து எந்த திட்டமும் இல்லை.

உள்கட்டமைப்பு வாக்குறுதிகள் மீண்டும் மீண்டும் கொடுக்கப்படுகிறது. நமக்கு எப்போது “ஸ்மார்ட் சிட்டிகள்” அல்லது வாழக்கூடிய நகரங்கள் கிடைக்கும். சமூகப் பாதுகாப்பு குறித்து ஒரு குறிப்பிடத்தக்க அறிவிப்பு கூட இல்லை. பட்ஜெட் இதற்கு எந்த தீர்வுகளையும் வழங்கவில்லை.– என்று கார்கே கூறினார்.

# மொராக்கோவில் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட பிரிட்டன் சிறுமி!

மொராக்கோவில் பிரிட்டன் சிறுமி ஒருவர் கடலுக்கு அடித்துச் செல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மொராக்கோவுக்குச் சுற்றுலா சென்ற பிரித்தானிய குடும்பத்தை சேர்ந்த 7 வயது சிறுமி இனாயா மக்டா அலையால் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவின் லங்காஷயரின் பிளாக்பர்ன் பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமி இனாயா மக்டா, புதன்கிழமை மொராக்கோவின் காசாபிளான்கா கடற்கரையில் பாறை மீது அமர்ந்திருந்த போது பிரமாண்ட அலை அடித்து கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

இதையடுத்து சிறுமியை மீட்கும் முயற்சியில் சர்வதேச அதிகாரிகளுடன் இணைந்து அப்பகுதி சுயேட்சை நாடாளுமன்ற உறுப்பினர் அட்னான் ஹுசைன் ஈடுபட்டார்.

கடுமையான சூழ்நிலைகள் இருப்பினும் தேடுதல் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது என்று அட்னான் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அப்பகுதியில் வீசி வரும் கடுமையான புயல் காரணமாக தேடுதல் பணியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.




இனாயாவை கண்டுபிடிக்கும் முயற்சியில் நாட்டின் அனைத்து வளங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று மொராக்கோ தூதுவர் உறுதியளித்துள்ளார்.

அதே சமயம் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உரிய ஆறுதலும் உடனுக்குடன் தகவலும் வழங்க சிறப்பு அதிகாரிகளை நியமிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஈரானை தாக்கினால் விளைவுகள் மத்திய கிழக்கு முழுவதும் பரவும்

## ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனி எச்சரிக்கை



ஈரானை தாக்கினால், அதன் விளைவுகள் மத்திய கிழக்கு முழுவதும் பரவும் என்று ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

“அமெரிக்கர்கள்ஒருபோரைத்தொடங்கினால் , இந்த முறை அது ஒரு பிராந்தியப் போராக இருக்கும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்,” என்று அயதுல்லா கூறியுள்ளார் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானிய தேசம் தகுந்த பதிலடி கொடுக்கும். “நாங்கள் தூண்டுபவர்கள் அல்ல, எந்த நாட்டின் மீதும் தாக்குதல் நடத்த நாங்கள் விரும்பவில்லை. ஆனால் ஈரான் தேசத்தைத் தாக்கும் அல்லது துன்புறுத்தும் எவருக்கும் ஈரானிய தேசம் தகுந்த பதிலடி கொடுக்கும்.

சமீபத்திய கிளர்ச்சி ஒரு இராணுவப் புரட்சியைப் போன்றது. நிச்சயமாக, அந்தப் புரட்சி ஒடுக்கப்பட்டது.” என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது கடற்படையை ஈரான் அருகே அனுப்பியுள்ள நிலையில் கமெனி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஒருபுறம் போர் பதற்றம் நிலவினாலும், மோதலைத் தவிர்க்க இரு நாடுகளும் தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் “சீரியஸாகப் பேசி வருகிறது” என்று ட்ரம்ப் கூறியுள்ளார். இரகசிய பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும், இதற்கான கட்டமைப்பு தயார் செய்யப்பட்டு வருவதாகவும் ஈரானின் பாதுகாப்பு அதிகாரி அலி லாரிஜானி தெரிவித்துள்ளார்.



## ரி-20 உலகக் கிண்ணம்-2026

# இந்தியாவுடன் ஆட பாகிஸ்தான் மறுப்பு

'ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடமாட்டோம் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவில் 20 அணிகள் பங்கேற்கும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் தொடங்கவுள்ளது.

இதற்கிடையில் பங்களாதேஷில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கப்படுவதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மோசமடைந்துள்ளது.

இந்நிலையில், ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியிலிருந்து முஸ்தபிஜுர் ரஹ்மான் நீக்கப்பட்டார்.

இதனால் பாதுகாப்புக் காரணத்தைக் கூறி இந்தியாவில் நடைபெறும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க இயலாது என பங்களாதேஷ் அறிவித்தது. அத்துடன் தமது அணி விளையாடும் போட்டிகளை இலங்கைக்கு மாற்றும்படியும் வேண்டுகோள் விடுத்தது.

ஆனால், ஐ.சி.சி. அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் பங்களாதேஷ் அணி உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியது. பங்களாதேஷ் அணி விலகியதால் ஸ்கொட்லாந்து அணிக்கு ரி-20 உலகக் கிண்ணத்தில் விளையாட வாய்ப்புக் கிடைத்தது.




இந்நிலையில் பங்களாதேஷ் அணிக்கு ஆதரவு தெரிவித்து பாகிஸ்தான் அணியும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலக உள்ளது எனத் தகவல் வெளியானது.

இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாட பாகிஸ்தான் அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஆனால், பெப்ரவரி 15ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் இந்தியாவுக்கு எதிராக நடைபெறவிருக்கும் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்காது என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இதனால், இந்தியா – பாகிஸ்தான் அணிகள் இடம்பிடித்திருந்த குழு 'ஏ' இல் இந்திய அணிக்கு இரு புள்ளிகள் தானாகவே வந்து சேரும் வாய்ப்புக் கிட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 02.02.2025




இன்று வெற்றிகரமான பலன்கள் காண உறுதியும் திட்டமிடலும் அவசியம். பொறுப்புகள் அதிகமாக இருந்தாலும் நீங்கள் உற்சாகமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. கவனக்குறைவு காரணமாக பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சி நிலவும். ஆழ்ந்த புரிந்துணர்வு ஏற்பட தேவையற்ற தீய உணர்வுகளை தவிர்க்கவும்.

இன்று வாய்ப்புகள் குறைந்து காணப்படும். சேமிப் பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்படும் என்பதால் அதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் பணிகளை எந்த இடையூறும் இல்லாமல் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்வீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி பற்றி உங்கள் துணையுடன் வெளிப்படையாக பேசுவீர்கள்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். சேமிப்பு நிலை சிறப்பக இருக்கும். இதனால் நிதியில் ஸ்திரத் தன்மை காணப்படும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் பூர்த்தியாகலாம் நீங்கள் சமநிலையோடு காணப்படுவீர்கள். அனைத்து விஷயங்க ளிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான சூழல் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்து வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல உறவை பரா மரிக்க இயலும்.

சுதந்திரமான நிதி நிலைமையும் நிதியில் ஸ்திரத்தன் மையும் காணப்படும். நீங்கள் உங்கள் நிதிநிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.




இன்று பயணம் செய்வதில் முனைந்து இருப்பீர்கள். உங்களைச் சுற்றி மாற்றங் கள் ஏற்படுவதை உணர்வீர்கள்.மற்ற வர்களுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்த பலன் தரும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.படைப்பாற்றல், புதுமை யான திறமை மற்றும் திட்டமிடல் மூலம் நீங்கள் பணியை சிறப்பாக செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சமநிலையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உறவில் திருப்தியை தக்க வைக்க நீங்கள் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.




இன்று நற்பலன் காண நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் பயனுள்ள தாக இருக்கும். இறை மந்திரம் மற்றும் ஸ்லோகங்கள் கூறுவதன் மூலம் நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங் கமைத்து மேற்கொள்வதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் மனதில் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடன் நேர்மறை யான உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் நம்பிக்கை யான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பணத்தை கையாளும்போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். பணத்தை செலவு செய்யும் போது அதிக செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் அதிக முயற்சி எடுப் பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலை கள் காணப்படும். இதனால் நீங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்வீர்கள். கடின மான பணிகளையும் திட்டமிட்டு எளிமையாக மேற்கொள் வீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணவரவு நிலையாகவும் அதிக அளவிலும் காணப் படும். இன்று நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். அதன் மூலம் திருப்தி காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். மறக்கமுடியாத தருணங்களை அனுப விப்பீர்கள். சவாலான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் கடினமான பணிகளையும் எளிமையாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நெருங்கிய நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் நீங்கள் இருவரும் நெருக்கமாவீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இது உங்கள் எதிர் காலத்திற்கு உதவும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள்.




முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று உங்கள் செயல்களில் கவனம் கொள்ள வேண்டிய நாள். உணர்ச்சிவசப்படுவதலை தவிர்க்க வேண்டும். செயல்களை திட்டமிட்டு மேற் கொண்டால் வெற்றி பெறலாம்.

நீங்கள் சக பணியாளர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள். பொறுமையுடன் தொடர்ந்து செயலாற் றுங்கள்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும். இது புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும். அதனால் நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.02.2025




இன்று சவால்கள் நிறைந்து காணப்படுவதால் சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் வழக்கமான பணிகளை மேற்கொள்வதை கடின மாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியாக இருப்பதன் மூலம் நன்மை பெறலாம்.

பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையை சமாளிக்க பொறுமை அவசியம். சக பணியாளர்களுடன் அமைதியான முறையில் உறவாட வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை தக்க வைத்துக் கொள்ள நட்பான அணுகுமுறை தேவை. உறவில் நல்லிணக்கம் ஏற்பட இருவரும் நல்ல புரிந் துணர்வை பராமரிக்க வேண்டும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக அதிக பணம் விரயமாகும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று பதற்றமான மன நிலையில் காணப்படுவீர்கள். அதனால் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைப்பது கடினம். உங்கள் அன்றாட செயல்களை மேற் கொள்ளும்போது கவனம் தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக காணப்படும். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணை யுடன் சூடான வாக்குவதங்கள் ஏற்படும். இது உறவில் மகிழ்ச்சியையும் அமைதியையும் பாதிக்கும்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. உங்களுக்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சீரான பலன்கள் கிடைக்கும் நாள்.இன்று நீங்கள் புத் துணர்ச்சியுடன் இருப்பதாக உணர் வீர்கள். இன்று சுப நிகழ்சிகள் நடப்ப தற்கான சாத்தியம் உள்ளது.

பணியைப் பொறுத்தவரை முன்னேற்றகரமான பலனுக்கு சாத்தியம் உள்ளது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு கொண்டி ருப்பீர்கள்.

நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் இனிமையாக இருக்கும்.இத னால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். சேமிப்பு நிலை உயர்வதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்த நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். எல்லா விஷயங்களிலும் பொறுமை மேற்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியில் கவனக்குறைவு ஏற்படலாம். எனவே நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் கவனம் தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடப்பதும் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதும் நல்லுறவை வளர்க்க உதவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

அதிக பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக இருப்பதும் பிரார்த்தனை மேற்கொள்வதும் சிறந்த பலன் தரும்.



# அநுராதபுரம் கல்துளம் பகுதியில் 2 கார்கள் நேருக்கு நேர் மோதல்

**(உடப்பு நிருபர்-க.மகாதேவன்)**

அநுராதபுரம் கல்குளம் பொலிஸ் வீதித் தடைக்கு அருகில் நேற்று அதி காலை 5 மணியளவில் இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பேர் காயமடைந்து வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என திறப்பனை பொலிஸார் தெரிவித் தனர்.

, அநுராதபுரம் நகரில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இளைஞர்கள் நால்வர் பயணித்த காரும், களனியி லிருந்து அநுராதபுரத்திற்கு வழிபாட்டிற் காக ஒரே குடும்பத்தினர் பயணித்த கார் ஒன்றுமே இவ்வாறு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்து இடம்பெற்ற இடம் வளை வான பகுதி என்பதால், அநுராதபுரத்தி லிருந்து வந்த கார் வேகக் கட்டுப் பாட்டு இழந்து, வீதியின் வலது பக்க மாகச் சென்று மற்றைய காருடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்தில் அநுராதபுரத்திலிருந்து பயணித்த காரின் சாரதி உட்பட அதில் பயணித்த நால்வரும், மற்றைய காரில் பயணித்த ஒருவரும் என ஐவர் இவ் வாறு வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

விபத்தினால் இரண்டு கார்களின் முன்பகுதிகளும் பலத்த சேதமடைந் துள்ளன. சம்பவம் தொடர்பில் திறப்பனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.